# INTERNATIONAL JOURNAL OF CURRENT RESEARCH AND ACADEMIC REVIEW

ISSN - 2347 - 3215

VOL-13 SUPPLEMENT-5
SEPTEMBER-2025



www.ijcrar.com

EP
JOURNALS

# ST. ANNE'S ARTS AND SCIENCE COLLEGE

GNT Road, Madavaram, Chennai – 600 110

(Affiliated to the University of Madras)

# International Journal of Current Research and Academic Review

## INTERNATIONAL CONFERENCE

## Nature and Spirituality Through the Lens of Literature

## இலக்கியக் கண்ணோட்டத்தில் இயற்கையும் ஆன்மீகமும்

**SAASC-NSTLL-25**

**19 th SEPTEMBER 2025**





**Chief Patron**

Rev. Mother Dr. Leema Rosario SSAM

Chairperson

**Convenor**

Dr.I.Annammal Arputhamary

Principal

**Conference Organizing Secretary**

Smt.M.R.Benedict Kumari

Dean of College Development

**ORGANISED BY**

IQAC & Department of English and Tamil

VOL - , SUPPLEMENT -
SEPTEMBER 2025

ISSN NO - 2347 - 3215

*Int.J.Curr.Res.Aca.Rev.2025; 13(S5): 1-886*

EXCELLENT PUBLISHERS

*International Journal of Current Research and Academic Review*

**ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)**

**Journal home page:** http://www.ijcrar.com

INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

*Full Length Article* **IJCRAR/FLT/36**

# கல்கியின் பொன்னியின் செல்வனில் ஆன்மீக சிந்தனை

**அ. இரா. அறிவொளி*, முனைவர் ம. பிரபாகரன்**

[1]கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரூர், தர்மபுரி மாவட்டம் - 636903, [பகுதிநேர முனைவர்] வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை ¬– 117.

[2]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர், வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,சென்னை ¬– 117.

**முன்னுரை:**

சோழர்கால பண்பாடு சமயம் சார்ந்த கலைகளோடு பின்னிப்பிணைந்ததாக காணப்படுகிறது. வாழ்வியலில் ஆன்மீகம், ஆட்சி நிர்வாகத்தில் ஆன்மீகம், தாங்கள் கைக்கொண்ட நாகரிகத்தில் ஆன்மிகம் என்ற அளவிற்கு சோழர்கால சமுதாயம் இருந்தது என்பதனை பல வரலாற்று ஆதாரங்கள் தெரியப்படுத்துகின்றன.

கல்கி ஜெ. கிருஷ்ணமூர்த்தி என்பவரால் படைக்கப்பட்ட பொன்னியின் செல்வன் என்ற புதினம், சோழர்கால சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு அக்கால சமயப் போக்கு, சமயத்தில் மறுமலர்ச்சி, சமயத்தில் ஆன்மீக சிந்தனை என்று பல கோணங்களில் அமைகிறது.

Int.J.Curr.Res.Aca.Rev.2025; 13(S5): 1-886

EXCELLENT PUBLISHERS

International Journal of Current Research and Academic Review

ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)

Journal home page: http://www.ijcrar.com

INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

சோழர் ஆட்சியில் சைவ சமயமே பெரும் செல்வாக்கு பெற்று இருந்தது என்ற கருத்தை மாற்றி பலதரப்பட்ட சமய வழி ஆன்மீக சிந்தனைகளை கதாபாத்திரங்களோடு புகுத்திக் கல்கி அமைத்து உள்ளார் என்பதனை ஆதாரமாகக் கொண்டு கல்கியின் பொன்னியின் செல்வனில் ஆன்மீக சிந்தனை என்ற பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது.

## பொன்னியின் செல்வன் காலத்தில் சமுதாயத்தில் கோவில்களின் பங்கு

தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான கோவில்கள் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டன. அதில் பொன்னியின் செல்வன் என்று அழைக்கப்படும் இராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் காலத்தினால் அழிக்க முடியாதவைகளாகும். குறிப்பாக அம்மன்னன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய சின்னம் என்று அங்கிகரிக்கப்பட்டுள்ளது. வரலாற்று ஆசிரியர்கள் பலரும் தஞ்சைப் பெரிய கோவிலானது "தன்னை பார்க்கும் எவரையும் கவராமல் விடாது" என்று கூறியுள்ளனர்.

பொன்னியின் செல்வன் காலத்தில் கோவில்கள் இறை வழிபாட்டுக்கு மட்டுமின்றி பல சமுதாய பணிகளை ஆற்றும் மையங்களாகவும் இருந்துள்ளன. கோவில்களில் வேதங்களும், உருத்திரமும் ஓதப்பட்டன. இவற்றை வீணையுடன் அத்தியாயனம் செய்து வந்தார்கள். தேவாரம் பாடிய ஓதுவார்கள் திருப்பாட்டு ஓதும் மகேசுரர் என்று அழைக்கப்பட்டனர். ஓதுவார்களுடன் பிராமணரும் சேர்ந்து தேவாரம் ஓதியதை நாம் அறியமுடிகிறது. த.1.

கோவில்களில் நாடகங்களும், கூத்துக்களும் நடத்தப்பட்டன. தஞ்சைப் பெரிய கோவிலை பற்றிக் கூறும்போது "டாக்டர் வின்சென்ட் ஸ்மித் அவர்கள் இதைவிட நன்றாக நிருமாணிக்கப்பட்ட கோவில் தென்னிந்தியாவிலே இல்லை" என்று கூறுகிறார். இ.2.

## பொன்னியின் செல்வன் புதினத்தில் கோவில்கள்

### விண்ணகர் கோவில்

Int.J.Curr.Res.Aca.Rev.2025; 13(S5): 1-886

International Journal of Current Research and Academic Review
ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)
Journal home page: http://www.ijcrar.com
INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நீரில் பள்ளிக் கொண்டு நீர் மயமாக இருப்பவர் அல்லவா? எனவே ஏரிகளை காத்தருளுவதற்காக ஏரிக்கரையையொட்டி ஸ்ரீ நாராயணமூர்த்திக்கு கோவில் எடுப்பது அக்காலத்து வழக்கம். அதன்படி வீரநாராயண பெருமாளைக் கோவில் கொண்டு எழுந்தருள செய்தான். ப.3 அத்தகைய பெருமாளின் கோவிலுக்குத் தான் இப்போது வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் சென்றார்கள். சந்நிதிக்கு வந்து நின்றதும் ஆழ்வார்க்கடியான் பாட ஆரம்பித்தான்.

பின்னால் இந்த ஊர் பல பெருமைகளை அடையப்போகிறது. பால்வடியும் முகத்தில் தேஜஸ் பொங்கி நின்று நம்மாழ்வார் பாசுரங்களை கேட்ட பாலகன், வளர்ந்து நாதமுனிகள் என்ற திருநாமத்துடன் வைஷ்ணவ ஆச்சார்ய பரம்பரையில் முதல் ஆச்சாரியர் ஆகப்போகிறார் என்று வீரநாராயண விண்ணகரத்தைப் பற்றி கல்கி கூறுகின்றார்.

## குழகர் கோவில்

கோடியக்கரையில் உள்ள குழகர் கோவில் பற்றி கல்கி விளக்குகிறார். கோவிலுக்கு வெளியிலும் உட்பிரகாரத்திலும் கொன்னை, பன்னீர் முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து மலர்ந்து குலுங்கிக் கொண்டிருந்தன. பூங்குழலி ஆலயத்துக்குள் போனாள். பட்டர் அவளை பார்த்து முகமலர்ந்தார். தேங்காய் மூடியும், பிரசாதமும் கொண்டுவந்து பட்டர் கொடுத்தார். ப.4.

## துர்க்கை கோவில்

பொன்னியின் செல்வன் புதினத்தில் கொள்ளிடத்தில் படகில் செல்லும்போது பெரிய பழுவேட்டரையர் புயல் காற்றில் அகப்பட்டு படகு உடைந்து ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு ஓர் கோவில் அருகில் ஒதுங்குகிறார். அப்போது அவர் நினைத்து "இது விண்ணுலகம் இல்லை, மண்ணுலகத்தில் உள்ள அம்மன் கோவில், எதிரே தரிசனம் அளிப்பது அம்மனுடைய விக்கிரகம் தாம் விழுந்து கிடப்பது கர்ப்ப கிரஹத்தின் அருகிலுள்ள அர்த்த மண்டபம், அம்மனுக்கு அருகில் முணுக், முணுக்கென்று சிறிய தீபம்

EXCELLENT PUBLISHERS

International Journal of Current Research and Academic Review

ISSN: 2347-3215 Volume 13 Supplement 5 (September-2025)

Journal home page: http://www.ijcrar.com

INDEXED IN INDEX COPERNICUS - ICI Journals Master List 2022 - IJCRAR--ICV 2022: 81.15

எரிந்து கொண்டிருக்கிறது. அது வெளிச்சம் தான் சற்றுமுன் தம் கண்களைக் கூச செய்தது என்று பெரிய பழுவேட்டரையர் நினைத்தார். வெளியே அடிக்கும் புயலும், மழையும் தேவி கோவிலின் கர்ப்ப கிரஹத்துக்குள் ஒளிந்த தீபத்தை அசைக்க முடியவில்லை!ப.5.

இது ஒரு நல்ல சகுனமோ? துர்கா பரமேஸ்வரி தம்மிடத்தில் வைத்துள்ள கருணைக்கு அறிகுறியோ? ஜகன் மாதாவின் கருணையோ கருணை" என்று நினைக்கும் பெரிய பழுவேட்டரையர் இந்த கோவிலில் இருந்த படிதான் பாண்டிய நாட்டு சதிகாரர்களான எண்ணங்களை அறிந்துக் கொண்டார். சோழ நாட்டை சூழ்ந்துள்ள ஆபத்தைப் பற்றியும் தெரிவித்துக் கொள்கிறார்.